# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2030/8 - 2017 ජූලි මස 31 වැනි සඳුදා - 2017.07.31

*2030/8 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KOT/LND/ACQVI/01/12.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 03J/83/E/348.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாண, மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல பிரதேச செயலகப் பிரிவின் பெலவத்த கிராம அலுவலர் பிரிவின் பெலவத்த கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அதிபரால் தயாரிக்கப்பட்ட அ.க.பி 4 மற்றும் அ.க.பி. 40, தாள் இல. 29 இல் பிற்சேர்க்கை இல. 25 இல் காணித்துண்டு இல. 695 இல் காட்டப்பட்டுள்ள சுமார் 0.4300 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட ஓகந்தெஹேனவத்த என்ற காணித்துண்டின் எல்லைகள்.

**துண்டு இல. 695 - காணியின் பெயர் : ஓகந்தெஹேன வத்த; ஆரம்ப உரிமை கோருவோர் : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 0.4300 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இல. 48B, 48C, 526, 697 மற்றும் 527; கிழக்கு: துண்டு இல. 48C, 526, 697, 527, 169, 170, 59, 137 மற்றும் 64Q; தெற்கு: துண்டு இல. 169, 170, 59, 137, 64Q மற்றும் 64P; மேற்கு: துண்டு இல. 546, 545, 542, 529, 528, 530, 696, 531, 532, 533, 534 மற்றும் 48B.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, கொட்டபொல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கனேஷ அமரசிங்க,
பிரதேச செயலாளர்,
கொட்டபொல.

பிரதேச செயலகம்,
கொட்டபொல,
2017, யூலை 27.

8 - 506


1A - G 25992 - 73 (2017/07)



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம்: KDS/UDP/4/1/LAQ/NM/2.
காணி அமைச்சின் இல.: 13/99 VEP/414.

கிராமத்தினை விரிவுபடுத்துவதற்காக அட்டபாகே நோனாமலே வத்த காணித்துண்டொன்றினை எடுத்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கந்துகர இஹல கோரளேயில் கலத எனும் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவை மா அதிபரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 5844 ஆம் வரைபட இலக்கத்தினை உடைய வரைபடத்தில் 1 தொடக்கம் 2 வரையான 21.6678 ஹெக்டயார் விஸ்தீரணங் கொண்ட அட்டபாகே வத்த எனும் பெயரினைக் கொண்ட காணித்துண்டுகள்.

**01. துண்டு இல. 01**
காணியின் பெயர்: அட்டபாகே வத்த, வரைபட இலக்கம் 5844; உரிமை கோருவோர் விபரம்: மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு; விஸ்தீரணம்: 16.7058 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 02**
காணியின் பெயர்: அட்டபாகே வத்த, வரைபட இலக்கம் 5844; உரிமை கோருவோர் விபரம்: மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு; விஸ்தீரணம்: 4.9620 ஹெக்டயார்.

**நஷ்டஈட்டுப் பரீட்சிப்புத் தினங்கள் மற்றும் நேரங்கள்:**

| தொடர் இல. | வரைபட இல. | காணித் துண்டு | நஷ்டஈட்டுப் பரீட்சிப்புத் தினங்கள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|---|
| 01 | மு.பி.மஹ 5844 | 01 மற்றும் 02 | 2017.08.23 | பி.ப.1.30 | கம்பளை உட பலாத்த பிரதேச செயலகம் |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு, உடபலாத்த பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். ஏ. டீ. ரி. என். தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த,
கம்பளை.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
2017, யூலை 25.

8 - 507

---

திருத்தம்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/ST/LND/I/ACQUI/1/7/93.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4- 4-3/8/2014/PC26.

**திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம்**

காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் 2017.07.04 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் இல. 1428/1 இல் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் "குரிஎல்லேகம" கிராமம் என்பது "உடஎல்லேகம" என்றவாறு திருத்தப்பட வேண்டும் என்பதை அறியத் தருகின்றேன்.

எச். எம். நந்தசேன,
பிரதேச செயலாளர்,
சொரணாதொட்ட.

பிரதேச செயலகம்,
சொரணாதொட்ட,
2017, யூலை 26.

8 - 508